தமிழ்ப் புதுக்கவிதைப் படைப்புத் தடத்தில் க.நா.சு.

முனைவர் செ.ர. கார்த்திக் குமரன்

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி

மதுரை - 625 009, தமிழ்நாடு

ஆய்வுச்சுருக்கம்

நவீனத் தமிழிலக்கிய படைப்புத் தடத்தில் புதுக்கவிதைக்கெனத் தனித்ததோர் இடமுண்டு. இப்புதிய வடிவம் உலகமொழிகள் பலவற்றிலும் தோன்றிய ஒரு புதிய போக்காகக் கருதப்படுகின்றது. மரபான இலக்கண நியதிகளையெல்லாம் மீறி, கவித்துவப் பொருளுக்கு/உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, சுதந்திரத் தன்மையோடு இதனைப் படைக்கலாயினர். இதன் வாயிலாக, பிற இலக்கியப் படைப்புகளில் (புதினம், சிறுகதை) குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெற்றிருந்த ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன், புதுமைப்பித்தன் போன்றோரின் வரிசையில் க.நா.சுப்ரமண்யமும் இப்புதுக்கவிதை எழுதும் முயற்சியில் ஈடுபடலானார். நாவல், சிறுகதை, மொழிபெயர்ப்பு, விமரிசனம், கட்டுரை, நாடகம், திறனாய்வு எனப் பன்முகத்தளங்களில் இயங்கிய இவர், புதுக்கவிதையிலும் தன் முனைப்பைக் காட்டலாயினார். இதன்வழி, தனக்குரிய எண்ணங்களை, சிந்தனைங்களை இவர் வெகுகாத்திரமாகப் பதிவு செய்தார். இப்புதுக்கவிதையின்பால் இவர் கொண்டுள்ள ஈடுபாட்டையும் பங்களிப்பினையும் இன்ன பிறவற்றையும் ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமையப்பெறுகிறது.

முக்கியச் சொற்கள்

நவீனத் தமிழிலக்கியம், புதுக்கவிதை, க.நா.சுப்ரமண்யம்.

முன்னுரை

நவீனத் தமிழிலக்கிய படைப்புத் தடத்தில் புதுக்கவிதைக்கெனத் தனித்ததோர் இடமுண்டு. மரபார்ந்த இலக்கிய வடிவங்கள் மாற்றம் பெற்று, உரைநடை வடிவங்களான புனைகதைகள் (புதினம், சிறுகதை) தமிழில் தோன்றிய பின் கவிதைத்துறையிலும் புதியதொரு பரிணாமம் ஏற்படலாயிற்று. இப்புதிய வடிவம் உலகமொழிகள் பலவற்றிலும் தோன்றிய ஒரு புதிய போக்காகக் கருதப்படுகின்றது. அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும்தான் கவிதையில் இவ்விதப் போக்கினை முதலில் வளர்த்தெடுத்தார்கள். மரபான இலக்கண நியதிகளையெல்லாம் மீறி, கவித்துவப் பொருளுக்கு/உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, சுதந்திரத் தன்மையோடு இதனைப் படைக்கலாயினர். உரைநடை வடிவத்தோடு கூடிய இவ்வகைப் படைப்புகள் இந்திய மொழிகளிலும், குறிப்பாகத் தமிழிலும்கூட அதேகாலகட்டத்திலேயே சோதனை ரீதியாக உருப்பெறலாயின. தமிழில் இச்சோதனை முயற்சிக்கு முதன்முதலில் வித்திட்டவர் சுப்ரமணிய பாரதியாரே. தமிழ்க் கவிதையில் புதுமைகளைப் புகுத்திய இவரே இப்புதுக்கவிதையையும்

முதன்முதலாகக் கையாண்டார். அதன் பின்னர் அவர் படைத்த தனது கவிதைகள் அனைத்தையும் இவர், 'புதுக்கவிதை' (சோதிமிக்க நவகவிதை) என்றே கூறலானார்.

தமிழில் இப்புதுமை முயற்சியானது, தொடக்கத்தில் வசனகவிதை, இலகு கவிதை, யாப்பில்லா கவிதை, கட்டிலடங்கா கவிதை போன்ற பல சொல்லாடல்களில் பயன்படுத்தப்பட்டு வந்தது. இறுதியில் 'நியூ பொயட்ரி' (New Poetry) 'மாடர்ன் பொயட்ரி' (Modern Poetry) என்கிற ஆங்கிலச் சொற்களுக்கு நிகராகத் தமிழில் 'புதுக்கவிதை' என்ற சொல்லாக வழங்கலாயிற்று. மரபார்ந்த செய்யுள் வடிவங்களிலிருந்து இப்புதுக்கவிதை வடிவமானது மாற்றம் பெற்றிருப்பதோடு, இது பலதரப்பட்ட உள்ளடக்கக் கருத்தாக்கங்களையும், பாடுபொருண்மைகளையும் தன்வசம் கொண்டுள்ளது. இத்துடன் இது குறித்த இலக்கண வரையறைகளும்கூட வகுக்கப்பட்டன.

தொடக்ககாலத்தில் எழுதப்பட்ட புதுக்கவிதைகள் இயற்கை அழகுகளையும் வாழ்வியல் எண்ணங்களையும், காதல் உணர்வுகளையும், சமூகச் சூழல்களையும், தத்துவார்த்த சிந்தனைகளையும், தனிமனித மனோநிலைகளையும் வெளிப்படுத்தும் விதமாகவே சித்திரிக்கப்பட்டுள்ளன. இப்புதிய முயற்சிக்குப் பலவிதமான விவாதங்கள்/கருத்துக்களின்வழி மோதல்கள் ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் மீறி, இப்புதுக்கவிதை தன் தடத்தினைத் தமிழ்ச் சூழலில் பதித்தது. காலமாற்றத்திற்கேற்ப இப்புதுக்கவிதை, வெவ்வேறுவிதமான வடிவங்களுடன் இணைந்து உயிர்ப்பெறலாயிற்று. இதன் வளர்ச்சிக்கு அன்றைய காலகட்டங்களில் தோன்றிய சிற்றிதழ்களும்கூட இதற்குப் பெரும்பங்காற்றின. புதிய வடிவத்தின் ஜீவனுள்ள இப்படைப்புச் சித்திரங்களை வாசிக்கத் தொடங்கிய பலர், இப்புதுமையைக் கண்டு, தாங்களும் இதுபோன்று எழுத முனைந்தனர். இதன் காரணமாகப் பலவிதக் கவிதைப் படைப்புகள் பல்கிப் பெருகின. கதைகள், கட்டுரைகள் என தேசியம் சார்ந்து இயங்கிய இச்சிற்றிதழ்கள் இப்புதுமைக்கு வரவேற்பளித்து, புனைகதைப் படைப்புகளை/கவிதைகளைப் பிரசுரிக்கச் செய்தன. மேலுமிது, கருத்தாழமும் செறிவும் கலந்து மிளிரும் இலக்கியப் படைப்பாகவும் உருவாக்கம் பெற்றது. இவற்றிலுள்ள அமைப்புமுறை, வெளிப்பாட்டுத் தன்மை, தனித்துவங்கள், நடை ஆகியவற்றில் தரத்துடன் கூடிய படைப்புகளும் வெளிவந்தன. இதன் வாயிலாக, பிற இலக்கியப் படைப்புகளில் (புதினம், சிறுகதை) குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெற்றிருந்த ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன், புதுமைப்பித்தன் போன்றோரின் வரிசையில் க.நா.சுப்ரமண்யமும் இப்புதுக்கவிதை எழுதும் முயற்சியில் ஈடுபடலானார். அந்நாட்களில் அவர், முதலில் கவிதை எழுதுவதில் போதிய அளவு உற்சாகம் காட்டவில்லை; என்றாலும் சிற்றிதழ்களில் ஏற்பட்ட மாற்றத்திற்கேற்ப, தானும் கவிதையின் குணாகுணங்களை ஆராய வேண்டும் என்ற நோக்கத்தில் கவிதைப் படைப்பாக்க முயற்சியிலும் தனக்கான தடத்தினைப் பதிவுசெய்தார். நாவல், சிறுகதை, மொழிபெயர்ப்பு, விமரிசனம், கட்டுரை, நாடகம், திறனாய்வு எனப் பன்முகத்தளங்களில் இயங்கிய இவர், புதுக்கவிதையிலும் தன் முனைப்பைக் காட்டலாயினார். இதன்வழி, தனக்குரிய எண்ணங்களை, சிந்தனைங்களை இவர் வெகுகாத்திரமாகப் பதிவு செய்தார். இப்புதுக்கவிதையின்பால் இவர் கொண்டுள்ள ஈடுபாட்டையும் பங்களிப்பினையும் இன்ன பிறவற்றையும் ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமையப்பெறுகிறது.

தமிழ்ப் புதுக்கவிதை முன்னோடியரும் க.நா.சு.வின் உள்நுழைவும்

இலக்கியம் காலந்தோறும் புதுமையை நாடிச் செல்வதுடன், தனக்கென குறிப்பிட்டதொரு புதிய வடிவத்தையும் உருவாக்கியபடியே இருக்கிறது. இப்புதிய வடிவத்தினை ஏற்றுக்கொள்கிற அல்லது

உள்வாங்கிக் கொள்கிற திராணியுடைய மொழியே எக்காலத்திற்கும் நிலைத்திருக்கும். அந்தவகையில், தமிழ் மொழியும் ஒவ்வொரு காலச் சூழலுக்கேற்பவும் தன் வடிவத்தினை மாற்றிக்கொண்டதோடு, மரபினை இழக்கவும், தொடர்ந்து புதிய வடிவங்களோடு இயங்கும் ஆற்றலையும் பெறவுமாக இருக்கிறது. இதன் அடிப்படையில்தான் தமிழில் புதுவரவாகத் தோன்றிய புதுக்கவிதை என்ற வடிவமும் தன்னளவில் தனித்த இடத்தைப் பெற்றிருக்கிறது. குறிப்பாக, மேலை நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய தேசங்களில் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட இப்புதுக்கவிதையானது, அதன் பின்னர் உலகளாவிய தளத்தில் இயங்கக்கூடியதாகவும், பல்வேறு உருவ, உள்ளடக்கங்களைக் கொண்ட படைப்புகளாகவும் வெளிவந்துள்ளன.

தமிழில் இப்புதுக்கவிதை முயற்சிக்கு முன்னோடியாக விளங்கியவர் மகாகவி சுப்ரமண்ய பாரதியாரேயாவார். மேலைநாட்டுக் கவிஞரான வால்ட் விட்மனின் கவிதைகளே அவருக்கு உந்துதல் தந்தன. பாரதியைத் தொடர்ந்து ந.பிச்சமூர்த்தியும் எலியட்டின் கவிதைப் பாதிப்பைப் பெற்றிருந்ததோடு, பாரதியின் வசனகவிதையும் இணைத்தே தம் கவிதைகளைப் படைத்தளிக்கிறார். இத்துடன், தெளிவான சிந்தனையுடன்கூடிய புதுக்கவிதைப் படைப்புகளையும் இவர் வெளியிட்டார். இவர்களைத் தொடர்ந்து கு.ப.ராஜகோபாலனும் புதுக்கவிதையில் தம் பங்கினைச் செலுத்தினர். எனினும் இவ்விருவருடைய கவிதைகளானது, தொன்மையிலும் சொல்லும் பொருளிலும் பெரும் மாறுபாடு காணப்பட்டது. காரணம், சிறுகதைத் துறையில் குறிப்பிடத்தகுந்த மாற்றங்களையம் மறுமலர்ச்சியையும் பரிசோதித்து வெற்றிபெற்ற இவ்விருவரும் தோற்றுவித்த கவிதையினூடாகவே புதுக்கவிதையானது தமிழில் புத்துயிர் பெற்றது. இருவேறுவிதமான உள்ளடக்கக் கருத்தாக்கங்களுடன்கூடிய கவிதைகளும் வெளிவரத் தொடங்கின. அதனால், இவ்விருவரையும் 'தமிழ்ப் புதுக்கவிதையின் இரட்டையர்' என்று அழைக்கப்படுகின்ற அளவிற்குச் சிறப்பானதொரு நடையுடன், தம் படைப்புகளைப் படைத்தனர். இதற்கடுத்ததாக, புதுமைப்பித்தனும் இவர்களுடன் இணைந்து தமிழ்ப் புதுக்கவிதைக்கு இன்றியமையாததொரு பங்களிப்பை நல்கினார். மேலும், இப்புதுக்கவிதை குறித்த சர்ச்சைகளுக்குக் கூடுதல் விளக்கமளிக்க, அக்காலகட்டத்தில் வெளிவந்த எழுத்து, சூறாவளி, மணிக்கொடி போன்ற இதழ்கள் பெரிதும் உதவின. இவ்விதழ்களில் வெளிவந்த சிறுகதைகளைத் தொடர்ந்து புதுக்கவிதைப் படைப்புகளுக்கும் சிறந்த பரிசுகளை அறிவித்தன. இதனால், புதுக்கவிதை எனும் இலக்கியத்தளம் தமிழில், புதிதாக உருவாகி நிலைபெற்றது.

தமிழ்ப் புதுக்கவிதையின் தோற்றத்திற்குப் பின்னர், மரபார்ந்த இலக்கிய நயங்களுடன் உள்ள மரபுக்கவிதைக்கும், புதுமையான கவிதைப் படைப்பாளனுக்கும் இடையே கருத்து மோதல்களும் சுவையான, காத்திரமான விவாதங்களும் எழும்பத் தொடங்கின. இச்சூழ்நிலையிலதான் க.நா.சு. தன் படைப்பின் வாயிலாக அறிமுகமாகி, தனக்கான இடத்தைத் தமிழ்க் கவிதைப் படைப்புச் சூழலில் நிறுவினார். இதே காலகட்டத்தில் க.நா.சு. 'சூறாவளி' எனும் சிற்றிதழையும் (1939) நடத்தி வந்தார். ஆனாலும், இவ்விதழ் கவிதைக்கு முக்கியத்துவம் தரவில்லை. அக்கால இலக்கியச் சூழலைக் கருத்தில்கொண்டு 'மயன்' என்னும் புனைபெயரில், தன் நான்காவது இதழில் அவர் புதுக்கவிதைகளை எழுதி வெளியிட்டார்.

"இருபதாம் நூற்றாண்டுப் படைப்பாளிகளில் கவிதைக்கு நிகழ்ந்து கொண்டிருந்த சிக்கல்களை அறிந்தவர்களில் பாரதி, பிச்சமூர்த்தி, கு.ப.ரா., புதுமைப்பித்தன், க.நா.சு. இவர்கள் தான்

முக்கியமானவர்கள். அடுத்த நூற்றாண்டின் இரட்டைக் கதவு மூடிக்கிடந்ததை அறிந்தவர் பாரதி. அதைத் திறக்க முயன்றதில் அது சற்றுத் திறந்துகொண்டு இடைவெளி காட்டியது. பிச்சமூர்த்தி முயன்றதில் அது திறந்து கொண்டது. ஆனால், முழுமையாகத் திறந்துகொண்டு விடவில்லை. அவரே கூட அது முன்போல மூட வருகிறதா என்று பார்த்தார்;. ஆனால் க.நா.சு.வோ கதவை நன்றாகத் திறந்ததோடல்லாமல், கதவின் இரண்டு பக்கங்களையும் பெயர்த்து அப்புறப்படுத்திவிட்டார்"[1] எனும் ஞானக்கூத்தனின் கூற்றுக்கிணங்க, க.நா.சு. தமிழ்ப் புதுக்கவிதைக்கான வெளியை பரிபூரணமாகத் தமிழ்ச் சூழலில் திறந்துவிட்டிருப்பதோடு, தான் செய்ய நேர்ந்த பணியின் முக்கியத்துவத்தையும் அறிந்து, மிகக்காத்திரமாகத் தமிழ்க்கவிதைப் பரப்பில் செயல்படத் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தகுந்த அம்சமாகிறது.

க.நா.சு.வின் முதல் கவிதையும் ஏனைய கவிதை முயற்சிகளும்

நவீனத் தமிழிலக்கியத்தின் புதியதொரு வடிவமான புதுக்கவிதை என்பது, இன்று செழுமையும் பன்முகத் தன்மையும் கொண்டு, பலபடித்தான கருத்தியல்களுடன் இயங்கி வருகிறது. இன்றைய காலச் சூழலில் இப்புது வடிவம் அவசியமானதென்றாலும் தொடக்கத்தில் இது தன்னை நிலைநிறுத்திக்கொள்ள பல்வேறு விதமான எதிர்ப்புகளைச் சந்திக்க நேரிட்டது. இது மரபான செய்யுள் அமைப்பிலிருந்து மாற்றம் பெற்று, மறு தகவமைப்பிற்கு உட்படுத்தப்பட்டு, பலவிதப் பொருண்மைகளுடன் வெளிவரலாயிற்று.

"தமிழில் பாரதியின் 'வசனகவிதை' என்ற பெயரில் தொடங்கப்பட்டு, புதுமைப்பித்தன், கு.ப.ரா. ஆகியோரால் ஓரளவு முயற்சிக்கப்பட்டு, ந.பிச்சமூர்த்தியும், க.நா.சு.வும் நிலைநிறுத்திய வடிவம் புதுக்கவிதை. ந.பிச்சமூர்த்தி மற்றும் க.நா.சு. ஆகியோர் முயன்ற கவிதைகளை இப்போது ஒப்பிடும்போது, க.நா.சு.வின் கவிதைகள் இன்றைய நவீன கவிஞர்களுக்கும் பொருளம்சத்துடன் கூடிய அனுபவம் தரும் வடிவில் இருப்பதை உணரமுடிகிறது. ந.பிச்சமூர்த்தியின் வேதாந்த, லட்சியச்சார்பு, அவர் கவிதையை பழமையால் நங்கூரமிட்டு விடுகிறது. க.நா.சு.வின் கவிதைகள் லட்சியம் துறந்தவையாக உள்ளன. அந்தக் குணம் க.நா.சு.வின் கவிதைகளை இன்றைய நவீனக் கவிஞனுக்கு மேலும் இணக்கமாக்கக் கூடியது. தமிழில் நாவல், சிறுகதைகளின் வடிவம் மற்றும் பொருள் சார்ந்து தனது மொழிபெயர்ப்புகள் மற்றும் விமரிசனங்கள் மூலம் திட்டமான தரமதிப்பீட்டைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர் க.நா.சுப்பிரமணியம். அதேபோலவே புதுக்கவிதை தொடர்பாகவும் அந்தக் கலைவடிவம், நவீன வாழ்க்கை சார்ந்து துறக்க வேண்டியதும் ஏற்க வேண்டியதுமான அம்சங்களையும் நிகழ்த்திக் காட்டுவதற்காகவே தனது கவிதைகளை எழுதியுள்ளார்"[2] என்ற ஷங்கர் ராமசுப்ரமணியனின் கூற்றிலிருந்து, நவீன கவிதையுலகிற்கு க.நா.சு. திட்டவட்டமான கலையம்சத்தை உருவாக்க முயன்றுதான், தம் படைப்புகளைப் படைத்தார் என்பது தெளிவாகிறது.

தன் இளவயதில் சமஸ்கிருதத்தை விடுத்து ஆங்கிலம் படிக்கத் தொடங்கிய காலகட்டத்திலேயே க.நா.சு. கவிதைகளை ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கினர். பாரதியாரின் கவிதைகளைப் படித்த வேகத்தில்தான் தமிழிலும் அவர் எழுத முற்பட்டிருக்கிறார். அந்தவகையில், "அவர் எழுதிய முதல் கவிதை 'மணப்பெண்' என்பது. இது 14.5.1989 „சூறாவளி"யில் அச்சேறியது. இதற்குப் பிறகு கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் கவிதைகள் எதுவும் வெளியிடவில்லை. அடுத்து, 1958இல் „சரஸ்வதி"யில் „மின்னல் கீற்று" என்ற ஒரு கவிதையை அவர் எழுதியிருக்கிறார். இதைத் தொடர்ந்து 1959இல் „எழுத்து"விலும், 1972ல்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

„கசடதபற" விலும் எழுதியுள்ளார். இடையில் அவர் நடத்தி வந்த இலக்கிய வட்டத்தில் சில கவிதைகளை வெளியிட்டார். 1974இல் „நாற்றங்கால்" என்ற தொகுப்புக்கு இரண்டு கவிதைகள் தந்தார்"[3] என்பர்.

க.நா.சு. தொடக்கத்தில் கவிதையின் மீதே ஆர்வங்கொண்டிருந்தாலும் பிறகு அதில் அதிக ஈடுபாடில்லாது, புனைகதைப் படைப்பிலக்கியத்திலும் விமரிசனத்திலுமே தொடர்ந்து நாட்டம் கொண்டிருந்தார் என்பதை மேற்கண்ட கருத்தின்வழி அறியமுடிகிறது. தமிழிலக்கியத்தின் தரம் மேன்மையடைவதற்கும் அல்லது உயர்வதற்கும் இப்புதிய வடிவங்கள் (நாவல், சிறுகதை) இக்காலகட்டத்திற்குரியத் தேவையினைப் பூர்த்தி செய்யும் என்பதை உணர்ந்துதான், தம் படைப்புகளைக் க.நா.சு. காத்திரமாகப் படைத்தார். இதனால்தான், இவருக்குக் கவிதை முயற்சிகளில் ஈடுபட அவசியமோ, அவகாசமோ கிடைக்கவில்லை. இருப்பினும், கவிதை குறித்த சிந்தனையானது, தன் மனதில் தோன்றாமலில்லை. சில கவிஞர்களைச் சந்திக்கும் போதெல்லாம் (டி.கே.துரைசாமி) இதுபற்றி விவாதித்திருக்கிறார். இத்துடன், புதுக்கவிதைக்குரிய (அன்றைய) போக்குகள் குறித்தும் ஆராயும் விதமாக, இதழ்களில் வெளிவந்து கொண்டிருந்த படைப்புகளும் விமரிசனங்களும் இருந்தன. இதன் காரணமாக இதில் கவனம் செலுத்த வேண்டியிருந்தது. எனவேதான் இவர் சரஸ்வதியில் தன் கவிதைகளை எழுதினார். அவை முறையே 'மின்னல் கீற்று' - 20.09.1958, 'இரைச்சல்' - 10.10.1958, 'பேச்சாளர்', 'நினைவுச்சுவடு' - 25.10.1958, 'சந்திரன்' - 25.11.1958 ஆகியன. இதில் 'மின்னல் கீற்று' என்ற படைப்பு, கவிதையின் வருகை குறித்த, தன் எண்ணங்களைச் சொல்வதாக அமைந்தது.

"புழுக்கம் தாங்காமல் அன்றையத் தினசரியை விசிறிக் / கொண்டு நடந்தேன்; இந்தப் புழுக்கத்திலே மழை / பெய்தால் நன்றாக இருக்குமே என்று நான் நினைத்தேன். / தலையுச்சியிலே ஒரு குளிர் தூற்றல் - ஆஹா! இன்பம்! / சட்டச்சட பத்துத் தூற்றல்கள் - ஆஹா! ஆஹா! / பத்தே பத்துத் தூறல்தான் - பின்னர் புழுதியைக் கிளறிய / காற்று விசிற மழை ஓடி நகர்ந்துவிட்டது. கரியவானம் / பிளந்து கொண்டு கோடை மின்னல் கீற்று என்னைத் தேடிற்று / கையை நான் நீட்டியிருந்தால் அக்கோடையின் கீற்று / என்னைத் தொட்டிருக்கும்; உலகை அழித்திருக்கும்; / தினசரிச் செய்திகள் சுற்றியிருக்கும்; தூற்றல் இன்பம் / மரத்திருக்கும்; புழுக்கம் வெளி நிறைந்திருக்கும்; / புழுதி எழுந்து படர்ந்திருக்கும்; உலகம் ஒழிந்திருக்கும். / நான் தனியிருந்து என்ன செய்வதென்று கை நீட்டாதிருந்தேன்"[4] எனக் க.நா.சு. முடித்திருக்கும் இவ்வரிகளினூடான, புதுக்கவிஞர்களின் (பத்துத் தூற்றல்கள்) தன்மைகள் மற்றும் இப்புது வடிவத்திற்கு ஏற்பட்ட பிரச்சினைகள் (புழுக்கம்) முதலானவற்றை இவர் சித்திரிப்பதற்காகத் தலைப்பட்டிருக்கிறார். 'மின்னல் கீற்று' எனும் கவிதையின் மிளிர்வில் தமிழிலக்கியம், புத்தொளி பெறுவதாகவும், அனைவரையும் ஈர்க்கும்படியான உணர்வின் (தூற்றல் இன்பம்) வெளிப்பாடாகவும் அமைந்தது. இதனடிப்படையிலேதான் க.நா.சு., பற்பல சோதனை முயற்சிகளினூடே, சமகாலப் பிரச்சினைகளை எடுத்துரைக்கும் போக்கில் புதுக்கவிதையினைப் படைத்து வந்துள்ளார்.

க.நா.சு. கவிதைகளின் பாடுபொருண்மைகள்

க.நா.சு.வின் கவிதைகள் காலத்திற்கேற்ற வகையில், தன் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்தன. 'சரஸ்வதி' இதழில் தொடர்ந்து எழுதத் தொடங்கியபோது, தனக்கென்று ஒரு தனி பாணியையும் இவர் அமைத்துக்கொண்டார். இத்துடன், 'கவிதை?' என்ற கட்டுரை ஒன்றையும் எழுதி, கவிதை பற்றிய சிந்தனைக்கு வழிகாட்டியாகவும் விளங்கினார். இதனைத் தொடர்ந்து புதுக்கவிதையின்

© 2022, IRJTSR

வளமைக்கும் வளர்ச்சிக்கும் வித்திட்ட சி.சு.செல்லப்பாவின் ‘எழுத்து’ இதழிலும், பிறகு தனது ‘இலக்கிய வட்டம்’ எனும் இதழிலும் தமது படைப்புகளைப் புதிய புதிய சோதனை முறைகளில் படைத்தார். நவீன வாழ்க்கையின் சிக்கல்கள் மற்றும் சருக்குகள் அனைத்தையும் நேரடித் தன்மையுடன் தம் கவிதைகள்வழி எழுதி வெளியிட்டார். மொழிதலில் தெளிவும் வாசனுக்கோர் புரிதலையும்/கவனத்தையும் ஏற்படுத்தும் வகையில் பிரக்ஞையுடையவராகவும் இருந்தார். இப்புதிய கலைவடிவத்தின் வாயிலாகவே இதன் பரிணாம வளர்ச்சிக்கான முன்வரைவினைக் க.நா.சு. உருவாக்கினார். அந்த வகையில்,

“எனக்கும் / கவிதை பிடிக்காது. மனிதன் எத்தனையோ / எட்டுக்கள் எடுத்து வைத்துவிட்டான், இவற்றில் / எத்தனை எட்டுக்கள் கவிதையால் / சாத்திய மாயின / என்று யார் / தீர்மானித்துச் சொல்ல இயலும்? பின் / எதற்காகத்தான் கவிதை தோன்றுகிறது? / மொழியுடன் மழலை அழகு தான் / ஆனால் அது போதவே / போதாது. / போதுமானால் கவிதையைத் தவிர வேறு / இலக்கியம் தோன்றியிராதே. போதாது / என்று தான், ஒன்றன்பின் ஒன்றாக / இத்தனை இலக்கியத் / துறைகள் / தோன்றின – நாடகமும், நாவலும், நீள் / கதையும், கட்டுரையும் இல்லாவிட்டால் / தோன்றியிராது; ஆனால் அவையும் தான் / திருப்தி தருவதில்லையே! / அதனால் / தான் நானும் கவிதை எழுதுகிறேன். / மனிதனுக்குக் கலை எதுவும் திருப்தி தராது / மேலே, மேலே என்கிற உச்சத்தைத் தான் / தரும். கலையின் / பிறப்பு / இந்த அடிப்படையில் ஏற்படுவது. கடவுளே / இன்னமும் உயிர் வைத்துக் கொண்டிருப்பது / இந்த அடிப்படையில்தான் சாத்தியம் / என்று சொல்லலாம்.”[5] என தன் எழுத்துருவின் வழி கலை ஏற்படுத்தும் ஏக்கம்தான் வாசிப்பைத் தொடர்ந்து புத்துயிர் பெறச் செய்வதுடன், திருப்தி தரும் புதிய வடிவங்கள் தோன்றுவதும் இயல்பே என்கிறார். இதனால்தான், இலக்கியத் துறையில் காலங்காலமாக, விதவிதமான வடிவங்களுடனும் உள்ளடக்கங்களுடனும் பற்பல படைப்புக்கள் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன என்பதை தன் எழுத்துகளின்வழித் தெளிவுபடுத்துகிறார். இதே போல், இவர் எழுதிய காலகட்டத்திலேயே இப்புதுமைக்கு எதிரான போக்கும் நிலவியது. இதற்கு மறுப்பு தெரிவிக்கும் விதமாகவும் க.நா.சு. தன் கவிதையை மொழியாக்கியுள்ளார்.

“பிறருக்கு உகக்காததைச் / சொன்னவருக் கென்று / ஒரு தனி நரகம் உண்டானால் / அங்குதான் நான் / போவேன். / அங்குள்ளவருக்கும் / உகக்காததைச் சொல்ல / எனக்குத் தெரியும். அங் / கிருந்து எங்கு போவேனோ / தெரியாது. / கடை விரித்து கேட்டார் / இல்லாது போனவர் எத்தனையோ / பேர், ஊருக்கு உகக்காததைச் / சொன்ன பரம்பரை – அது / பெரிது காணீர்”[6] என்ற வரிகளினூடாக, தனித்த பார்வை மற்றும் பொருண்மையுடன் படைக்கப்படும் நவீனப் படைப்புகளானது, மரபான இலக்கியவாதிகளுக்கு உகந்ததாகாமல் தனித்திருப்பவர்களே ‘பெரிதுகாணீர்’ என்பதை உணரச் செய்கிறார். சமகாலத்திற்கேற்ற கருத்தாக்கங்களை வெளிப்படுத்திட, இது போன்ற புதுவடிவங்கள் தேவை என்பதை உணராமல் இருப்பவர்களுக்கு எதிராகவே, ‘பரம்பரை’ என்னும் தலைப்பில் தன் படைப்பை படைத்துள்ளார் என அனுமானிக்கலாம். மேலும், பழைய இலக்கிய வடிவங்களின் போதாமையையும்கூட இதனூடாகவே எடுத்துரைத்துள்ளார். இதற்குச் சான்றாக அமைகிற கவிதைதான் ‘பல்லியும் முதலையே’ எனும் கவிதை:

“பல்லியும் முதலையே / பாட்டும் மோளமே / வாழ்வும் சாவிலே / இருளும் ஒளியில்தான். / தொலைவும் அருகிலே / எல்லையும் கண்ணில்தான், / வட்டமும் மையப்புள்ளியிலே / புல்லும் மூங்கிலே / உள்ளதும் மாயமேகாண் / உடையதும் இலாததுவே / கசப்பதும் சர்க்கரைதான் / உண்மையும்

இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு

பொய்யலவோ / பல்லியும் முதலையே / புல்லும் மூங்கிலே"[7] என்பதாக இக்கவிதை நிறைவுறுகிறது. 1964இல் க.நா.சு. தன்னுடைய 'இலக்கிய வட்டத்'தில் வெளியான மேற்கண்ட கவிதையினூடாக, தன் மனதில் உண்டாகும் உணர்வுகளை, எண்ணங்களைப் பதிவு செய்ததோடு, வாழ்வியலின் தத்துவத்தையும் கலைவடிவமாக்கியுள்ளார். இத்துடன், ஒவ்வொருவரும், தான் பார்க்கின்ற உலகினை வெவ்வேறான புரிதல்களுடன் புரிந்து கொண்டிருப்பதையும் இதில் சித்திரித்துள்ளார். பார்வை மாறுபாடு போன்றே இலக்கிய (வடிவ) மாறுபாடும் புதியனவற்றைத் தோற்றுவிக்கக்கூடும் என்பதையும் இதன்வழி வெளிப்படுத்துகிறார். இதனைப் போன்றே, 'சலிப்பும் சண்டையும்' என்ற தலைப்பின்கீழ் அமைந்த கவிதையில்,

"நான் பார்ப்பதையே நீயும் / பார்க்கிறாய். ஆனால் நான் நினைப்பதை / நீ நினைப்பதில்லை. / நான் வாழ்கிற உலகத்திலேதான் / நீயும் வாழ்கிறாய். ஆனால் / இருவரும் அதுபற்றிப் பேசும்போது / ஒரே உலகமாகத் தோன்றவில்லையே! / வேறுவேறு உலகமாகத் தோன்றுவதும் ஏன் / வேறு வேறு நினைப்புகள் ஏற்படுவதேன்? / வித்தியாசங்கள் மறைந்துவிட்டால் / வாழ்க்கையிலே சலிப்பு ஏற்பட்டுவிடும் / என்கிறாய் ஏற்றுக் கொள்கிறேன். / சலிப்பு ஏற்படவேண்டாம். சண்டையும் / ஏற்படாமல் இருக்கட்டுமே போதும்"[8] எனச் சுட்டி, தன்னுடைய கருத்தாக்கத்திற்கு மேலும் வலுசேர்க்கிறார். பார்வை மற்றும் நினைப்புக்குமிடையே தோன்றுகின்ற வித்தியாசங்களையும் வாழ்க்கையில் சலிப்பு ஏற்படாமலிருக்க மாற்றங்கள் அவசியம் என்பதையும் இதன்வழி எடுத்துரைக்கிறார். பன்முக இலக்கியங்களும் இதேவகையான பலவித மாற்றங்களைக் காலந்தோறும் பெற்றிருக்கின்றன. விதவிதமான இலக்கிய வடிவங்கள் மற்றும் உள்ளடக்கங்கள் தோன்றுவதற்குரிய சமூக மாறுதல்கள்தான் முக்கியப்பங்காற்றுகின்றன. மாறுதலின்றி வளர்ச்சியடைய முடியாது என்பதை அறிந்துதான் அவர், தான் வாழும் வாழ்க்கையின் சிக்கல்களையும் அதன் அகபுறப் பரிமாணங்களையும் தன் மொழியினால் வெளிப்படுத்துகிறார். இதற்கடுத்தபடியாக, 'சாவு' என்கிற தலைப்பில் அமைந்துள்ள கவிதையைச் சுட்ட வேண்டியதிருக்கிறது.

"சாவைப் பற்றிச் சிந்திப்பவனை ஒரு காலத்தில் / ஞானி என்று உலகம் போற்றியது. அந்தச் சாவின் / நிழலிலே வாழ்வதெப்படி என்று சொன்னவனைத் / தத்துவ ஞானி என்று பாராட்டி விட்டுத் / தன்வழி சென்றது. விஞ்ஞானி என்று இன்று / சொல்லிக் கொள்பவனுக்கு ஏதாவது சக்தி / இருந்தால், சந்திர லோகத்துக்குச் சென்று / திரும்பி வருவது போலச் செத்துத் திரும்பி வந்து / சாவு என்பது என்ன? சாவு காலத்தில் காலம் / எதிர்நோக்கிப் போகிறதா என்று சொல்ல / வல்லவனாக இருக்க வேண்டும். ... / ஓரடி மேலே செல்ல வழி வகுத்துத் தருபவனை / விஞ்ஞானி என்று பாராட்டலாம். ஆனால் / அவர்களும், பேர்நீங்கிப் பிணம் என்று பெயர் / பெற்றவின் செல்ல எதுவும் இல்லாமல் / மோனம் சாதிக்கின்றனர் ...... / சாவு என்று வந்தற்பின் அந்நிலைக்கும் ஒரு முடிவு / சாவு – உண்டா? நித்தியமான நிலை அதுதான் / நீடிக்கும் என்றால் அதற்கு வழி செய்ய வகை / காணாத இவ்வாழ்க்கைக்கு அர்த்தம்தான் என்ன?"[9] என்கிற விதமாய் இக்கவிதை நிறைவிக்கப்பட்டிருக்கிறது. 'சாவு" என்கிற தலைப்பிலமைந்த இக்கவிதையில், மரணத்தின் நிலையைப் பலவாறாக எடுத்துரைக்கிறார். இலக்கியப் படைப்பாளிகள், சித்தர்கள், விஞ்ஞானிகள், ஞானிகள் போன்ற பலரும் எவ்வளவுதான் முயன்றாலும் இறப்பிற்குப் பிறகான உணர்வுகளை/நிலையை அறியமுடிவதில்லை. இச்சாவினைப் பற்றிய தத்துவார்த்த விளக்கங்கள்

பலவற்றைக் கூறினாலும் அதில் எவ்வித ஓர்மையும் இருப்பதில்லை. இயற்கையூடனான நீதியானது, காலத்தின் சூட்சமத்தினால் சூன்யமாகிறது என்பதை பிரக்ஞையுடன் எடுத்தியம்புகிறார். மேலும், 'சாவு என்பது இடைவெளி' என்று எஸ்.சம்பத் தன் நாவலில் (இடைவெளி) குறிப்பிடுவது போல, இவர் கவிதையின் வழி 'சாவு என்பது ஒர் அதிசய உணர்ச்சி' என்று கூறுகிறார்.

காலத்தின் கையில்தான் வாழ்க்கை இருக்கிறதென்றாலும் அதிலிருந்து முரண்பட்டுதான் வாழ்வியல் சூழல்கள் அமைகின்றன என்பதையும் பின்வரும் கவிதைவழிப் புலப்படுத்திட முயன்றுள்ளார். " திருவாரூர்க் கமலம் அவள் / காயமெனும் மருந்து கொண்டு / ரஸவாதம் புரிகின்றாள் / மாக்ஸ்ஃ பாக்டர் தேவையில்லை / மனமே அவளைக் கன்னியாக என்றும் காண / உதவி புரிகின்றது. / நித்தியமான கன்னியவள் / ஆசை அடங்க அடங்க / ஓயாது ஆசை ஊட்டுபவள். / வேறு எவளிடமும் இல்லாத / சுரக்கு அவளிடம் ஒன்றுமில்லை / இல்லை என்று காண இயலாது. / திருவாரூர்க் காலம் அவள் / ரஸவாதம் புரிகின்றாள்"[10] என அமைந்த இக்கவிதையில், „தேவதாசி முறை" குறித்த வரலாற்றினையே பதிவு செய்கிறார். அழகான பெண்களை கோவிலில் பொட்டுக்கட்டி அனுப்பியவர்களில் இறுதித் தலைமுறையைச் சார்ந்தவரான „திருவாரூர் திலகமே" இதில் திருவாரூர்க் கமலமாக"க் கூறியுள்ளார். பரதம் என்ற கலையைத் தங்கள் நாளங்களில் சுமந்து வந்திருப்பவர்கள். கோவில்கள் இவர்களது கலை வெளிச்சத்தைப் பெற்றிருந்தாலும், இப்பெண்கள் மீது வாழ்கை வெளிச்சம் விழவில்லை. இதனைத்தான் க.நா.சு. தன் கவிதைவழி ஆராய்கிறார். யாரையும் கலையினால் மாற்றக்கூடிய வித்தையை (ரஸவாதம்) இவர்கள் பெற்றிருப்பதோடு, மனமே இவர்களை என்றும் கன்னியாகக் காணச் செய்கிறது. சமூகக் கட்டமைப்பினை மீறிய பெண்ணாக இருந்தாலும் அவளுக்கென்று இருக்கும் வாழ்க்கை பற்றிய புரிதலையே இதில் விளக்குகிறார். இவ்வாறாக, க.நா.சு.வின் கவிதைப் படைப்புகளில் பல்வேறுவிதமான பாடுபொருண்மைகள் அமைந்திருந்தாலும், கவிதை பற்றிய சுய விமரிசனமும் அது குறித்த பார்வையுமே பெரும்பாலும் அமைந்துள்ளன. இவற்றோடு, இன்ன பிற உள்ளடக்கங்களைக் கொண்டு அவர் கவிதைகளைப் படைத்திருந்தாலும் அவையெல்லாம் சோதனை முயற்சியிலேயேதான் அமைந்தன எனின் மறுப்பதற்கில்லை. இத்துடன், தன் கவிதை குறித்த வாசகரின் எண்ணத்தையும்கூட அவர் புரிந்தும் செயல்பட்டிருக்கிறார்.

இதற்கு, "என் புதுக்கவிதை முயற்சிகள் கவிதையாகவும் இலக்கணமாகவும் உருவெடுக்க, வாசகர்கள், ரசிகர்கள் உள்ளத்தில் எதிரொலித்துப் பலன்தரப் பலகாலம் ஆகலாம் என்பதையும் அறிந்தேதான் நான் இந்தக் கவிதைச் சோதனையைச் செய்து பார்க்கிறேன்"[11] என்கிற இவரின் கூற்றே பதில் தருவதாய் இருக்கிறது.

க.நா.சு. கவிதைகளின் தனித்தன்மைகள்

க.நா.சு. கவிதையின் தனித்தன்மையில் ஒன்று 'இருண்மை'. "இருண்மை என்பதற்குப் புரிந்து கொள்வதற்குச் சிரமமான, சிக்கலான அல்லது தெளிவற்ற தன்மை"[12] என்று ஒரு விளக்கம் கூறப்படுகிறது. ஒரு பொருள், ஒன்றுக்கு மேற்பட்ட பொருளாகக் காட்சி தரும் நிலை இருண்மை எனப்படும். உலக இலக்கிய வரலாற்றில் இருண்மையியல் தோன்றியதற்கு மதச் சிந்தனைகளும் விவாதங்களும் முதன்மைக் காரணமாக அமைந்தன என்பதுதான் நிதர்சனம்.

பதினாறாம் நூற்றாண்டில், இங்கிலாந்தில் நிலவிய அரசியல் நெருக்கடிகளின் காரணமாகப் படைப்பாளிகள், தங்களின் சிந்தனைகளை நேரடியாகக் கூறாமல் மறைபொருளோடு, இரட்டைப்பொருள் கொண்ட உருவக நிலையில் கூறும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இதனால், மறைமுகமாகக் கருத்துக்களைப் புனையும் சூழல் படைப்பாளிகளுக்கு ஏற்பட்டது. இவ்வாறு எழுதப்பட்ட படைப்புகளின் பொருண்மைகளை வாசகர்கள் எளிதில் புரிந்துகொள்ள முடியாத நிலை புனைவு முறைகளுள் இடம்பெற்றன. இருண்மையின் தோற்றத்திற்கு மேற்குறிப்பிட்டவாறு உருவக முறையில் படைக்கத் தொடங்கியமையும் ஒரு காரணமாக அமைந்தது.

க.நா.சு.வின் 'வைகுண்டம்' என்ற கவிதை இருண்மைப் படைப்புக்குத் தக்க சான்றாக அமைகின்றது. "சொற்களை மரபுப்படி எடுத்தாளாமல் உடைத்துத் துண்டுகளாக்கிப் படைப்பில் பயன்படுத்துவதன் மூலம் இருண்மையை உருவாக்கலாம்"[13] என்று ம.திருமலை தன் கருத்தை முன்வைக்கிறார். க.நா.சு.வின் இக்கவிதை அந்த வகையைச் சேர்ந்ததுதான். இக்கவிதையில் புனையப்பட்டுள்ள கருத்து முழுவதும் காலஞ்சென்ற கவிஞர் க.நா.சுப்ரமண்யம் அவர்களுடையது.

"வைகுண்டத்து / வாசல் / செல்லரித்தது / போக / பாக்கி / க்ரீச் / சிட்டுத் / திறந்து / நிற்க ... / யார் - யார் / அவர் - அவர் / யாரோ / தெரு / வெல்லாம் / மூ / ணு / வ / ரி / சை / க்யூ / நிற்க / ஆண் / டொன் / றொன் / றாகக் / கழிய / ஐம் / பத் / திரண்டும் / போக / எஞ்சி / ய / இரு / பத் / தெட்டும் / பத்தும் / நீண்டு"[14] என்கிற இக்கவிதை இலக்கிய வட்டம் இதழில் 1964 இல் வெளிவந்தது. இக்கவிதை விண்ணகம் பற்றிய மக்களின் நம்பிக்கையைக் கேள்வி கேட்கிறது. 'வைகுண்டத்து வாசல் செல்லரித்த' என்ற தொடரின் மூலம், வைகுண்டம் பற்றிய கருத்தியலைக் க.நா.சு. மறுக்கிறார் என்று கூறவியலும். மேற்கண்ட வரிகளில் க.நா.சு. மதத்தலைவர்களைப் பகடி செய்கிறார் போலும். மதப்பெரியோர்கள் மக்களின் முக்திக்கு வழிகாட்டுபவர்கள்தான்; என்றாலும்கூட அவர்களும் வைகுண்டத்து வாசலில், வரிசையில் நெருக்கியடித்துக் கொண்டு காத்திருக்கும் நிலையில்தான் உள்ளனர் என்று கவிதையில் காட்டுகிறார். இதுகூட ஒரு வகையில் நிறுவனமாக்கப்பட்ட சமயத்தின் மீது அவர் முன்வைக்கிற விமரிசனமேயாகும்.

க.நா.சு.வின் கவிதையை உற்றுநோக்குகையில், சொற்களைச் சிதைத்து, வரிசை முறைமாற்றி எழுதுவதன் மூலம் இருண்மைப் பண்பையும் புதிய உத்தியையும் கையாண்டுள்ளார். "தெரு / வெல்லாம் / மூ / ணு / வ / ரி / சை / க்யூ"[15] என்ற கவிதை அமைப்பு, நமக்கு ஒரு செய்தியைக் காட்சிப்படுத்துவதாகவும் குழப்பத்தை ஏற்படுத்துவதாகவும் இருக்கிறது. இதே கவிதையில் 'திரும்பிப் பார்க்க' என்பதை, "பிம்ருதி / ப்பார்க்க / காணாது / கண்டு / கண்டது / கொண்டு"[16] எனத் தலைகீழாக எழுதி, புதியதோர் உத்தியைக் க.நா.சு. கையாளுகிறார். இதன்மூலம் ஒருவகை இருண்மைத் தன்மையைக் க.நா.சு. உருவாக்குகிறார். இவ்வகையில் அவர் புதுக்கவிதைகளில் தன்னால் இயன்றளவு தனித்தன்மையுடன் படைக்க முயன்றிருக்கிறார்.

நிறைவாக

காலந்தோறும் படைக்கப்பட்டு வந்து எவ்வொரு கலை, இலக்கியமும் அதற்குச் சற்று முற்பட்ட காலத்திலுள்ள பதிவுகளையும், அக்காலகட்ட வாழ்வியலின் எதிர்வினையாகவுமே இருந்து வருகின்றன என்பதைக் கலை, இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் தொடர்ந்து எடுத்துக் கூறிவருகின்றனர். இந்திய மற்றும் தமிழ்ச்சூழலில் உருவான புதுக்கவிதை இயக்கங்கள் மேலைநாட்டு அறிஞர்களான டி.எஸ். எலியட்

போன்றவர்களை முன்னோடிகளாகக் கொண்டு உருவானதேயாகும். தமிழில் பாரதி வழியாக விட்மனின் தாக்கங்களை முன்னிறுத்தியே புதுக்கவிதை இயக்கம் உருவானது.

அதற்கடுத்ததாக, ந.பிச்சமூர்த்தியின் முதல் கவிதையான ‘காதல்’ மணிக்கொடி இதழில் வெளிவந்ததும், தமிழில் கவிதைப் படைப்பானது மலர்ச்சிப் பெற்றுள்ளது. பிறகு புதுமைப்பித்தன், கு.ப.ரா., க.நா.சு. போன்றோர்கள் சி.சு.செல்லப்பாவின் ‘எழுத்து’ இதழில் எழுதினார்கள். இவ்விதழ் வெளிவந்த காலம்தான், புதுக்கவிதைக்கான ஆரோக்கியமான வளர்ச்சிக் காலகட்டம். பாரதி மறைந்த பின் சுமார் 15 ஆண்டுகள் கழித்து வசனகவிதைகளைத் தொடர்ந்து எழுதத் தொடங்கி, அதை ஓர் இயக்கமாக வளர்த்தெடுத்த பெருமை ந.பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், கு.ப.ரா., க.நா.சு. இவர்களையேச் சேரும். மேலும், சி.சு.செல்லப்பா தமிழில் புதுக்கவிதை எழுதியவர்களுக்கு ஊக்கமளித்ததோடு, அவருங்கூட சிலவற்றை எழுதி வெளியிட்டிருக்கிறார்.

தமிழ்ப் புதுக்கவிதை என்ற சொல்லை உருவாக்கியவர் க.நா.சு.தான். இவர், ‘மயன்’ என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியவர். இந்தக் காலத்துக்கேற்ற சிக்கலான வார்த்தைச் சேர்க்கையில் நிரந்தரமாக்குவதற்கு, அழியாத இலக்கிய உண்மையாக்குவதற்குப் புதுக்கவிதை தேவை. அப்போதுதான் சங்ககாலகட்டத்தைய சிறந்த கவிதைச் சிருஷ்டிகளையும், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற நூல்களின் தனித்தன்மைகளையும் நாம் இன்று எட்ட முடியும் என்கிறார். இத்துடன், நம்முடைய இன்றைய தினசரி வாழ்விலே இடம்பெறுகின்ற விசயங்கள் எல்லாமே உவமைகள், உருவகங்கள், ஏக்கங்கள், ஆசைகள், வார்த்தைகள், மௌனங்கள் என இவை எல்லாவுமாகவே க.நா.சு.வின் கவிதையின் பொருண்மைகளாக அமைந்திருக்கின்றன.

க.நா.சு. தன் கவிதை அனுபவத்தைப் பற்றி கூறுகையில், என் கவிதைகளை நான் நூலாகப் படித்துப் பார்க்கையில், அது எனக்கே ஒரு நூதன அனுபவமாகப்பட்டது. இது மற்ற கவிகளுக்கும் இப்படித்தானோ என்று எனக்குத் தெரியாது. ஆனால், அடிக்குறிப்பில்லாத இந்நூலிலுள்ள வேறுசில கவிதைகளுக்கும் ஆதாரம், வேறு கவிதைகளின் எழுத்தில் இருப்பது போலத் தோன்றுகிறது. தெரிந்து காப்பியடிக்க வேண்டும் என்று செய்ததில்லை அது. ஆதாரக் கவியின் பெயர், கவிதையின் தலைப்பும்கூட மறந்து போய்விட்டது. இரண்டு மூன்று இருக்கலாமோ என்று எண்ணுகிறேன். மற்றவை எனக்குத்தான் சொந்தம் என்று கூறியுள்ளார்.

புதுக்கவிதையின் வேலை என்பது, அழுத்தம் நேரும் இடங்களைப் பற்றி முழுக் கவனத்தோடு இருந்து, அவ்விடங்களில் சப்தத்தின் குரலை வித்தியாசப்படுத்திக் காட்டுவதுதான். எனவே, அவ்விடங்களைப் பற்றிய கவனம் எந்தப் படைப்பாளிக்கு இருக்குமோ, அவனே புதுக்கவிதையைக் கையாள முடியும். ஒவ்வொரு கவிதையும் அதற்கான சுதந்திரமான வாழ்வைக் கொண்டுள்ளதோடு, கவிஞனின் வாழ்வில் ஒரு கூறாகவும் மனித சரித்திரத்தின் ஓர் அங்கமாகவும் ஆகிறது. இதில் உணரப்பட்ட வாழ்வின் பிரதிபலிப்பே க.நா.சு.வினுடைய கவிதைகளில் பாடுபொருள் சார்ந்த பிரதிபலிப்பாகவும் உள்ளது. மேலும், வாழ்க்கையை அப்படியே ஏற்றுக்கொண்டு, அதை தான் கண்ட உக்கிரத்தில் சற்றும் குறைக்காமல், சமரசம் செய்யாமல், அனுபவத்திற்கும் பொருந்திப் போகிற வார்த்தைகளைத் தேர்வு செய்யும் விதத்திதனாய் க.நா.சு.வின் கவிதைகள் அமையப்பெற்றிருக்கின்றன என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

© 2022, IRJTSR

க.நா.சு., ஒரு விதத்தில் தமிழ்ப் புதுக்கவிதை இலக்கிய வகையின் சோதனைமுறைப் படைப்பாளியாகவும் முன்னோடிக் கவிஞராகவும் கருதப்படுகிறார். புதுக்கவிதைத் துறையில் இவரது படைப்புகளின்வழி, பெருங்கவிஞர் என்ற அந்தஸ்து பெறாவிட்டாலும், புறக்கணிக்க முடியாத ஒரு புதுக்கவிஞரே. தமிழ்ப் புதுக்கவிதைகளின் வளர்நிலையில் தமது பங்களிப்பினை உரிய விதத்தில் செய்துள்ளதுடன், நவீனத் தமிழ்க் கவிதை வரலாற்றில் ‘மயன்’ என்ற பெயரில் இருபதாம் நூற்றாண்டின், காத்திரம் வாய்ந்த, நுட்பமான பல கவிதைகளைக் க.நா.சு. வெளியிட்டுள்ளார் என்பதும் தெளிவாகிறது.

மேற்கோள் விளக்கக் குறிப்புகள்

[1] ஞானக்கூத்தன் (க.ஆ.), க.நா.சு. கவிதைகள், ப.11.
[2] ஷங்கர் ராம சுப்ரமணியன், (க.ஆ.), நவீனக் கவிதையை க.நா.சு.விலிருந்தும் தொடங்கலாம், ப.1.
[3] க.நா.சுப்ரமண்யம் (நூ.ஆ.), க.நா.சு. கவிதைகள், ப.9.
[4] மேலது., ப.59.
[5] மேலது., பக்.66-67.
[6] மேலது., ப.71.
[7] மேலது., ப.89.
[8] மேலது., ப.151.
[9] மேலது., பக்.165-166.
[10] மேலது., ப.172.
[11] கந்தசாமி, சா. (பதி.ஆ.), க.நா.சு. 90, ப.84.
[12] ம.திருமலை(நூ.ஆ.), இருண்மையியல் கொள்கையும் பயில்முறையும், ப.16.
[13] மேலது., ப.145.
[14] க.நா.சுப்ரமண்யம் (நூ.ஆ.), க.நா.சு. கவிதைகள், ப.150.
[15] மேலது., ப.72.
[16] மேலது., ப.74.

இல்ல முகவரி

முனைவர் செ.ர. கார்த்திக் குமரன்

47A, மகால் வடம்போக்கித் தெரு

மதுரை - 625 001.